திரு. வே. பெரியசாமி : அந்தப் பகுதியிலேயுள்ள ஆதிவாசிகள், ஆதிதிராவிட மக்கள் 25 கிலோ மீட்டர் வரை நடந்து வந்துகொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே மினி பஸ்களெல்லாம் விடப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். கருணையுள்ளம் கொண்ட தாயுள்ளங்கொண்ட என்னுடைய கடவுள் அதை விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணல் காந்தி அவர்கள் கண்ட கனவுகளை நிறைவேற்றுகிற அரசாங்கமாக இந்த அரசாங்கம் இருக்கிறது. கிராம இராஜ்யம் மலர— மலர்ந்தால்தான் பெற்றிருக்கின்ற சுதந்திரத்தை முழுமையான சுதந்திரத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று அண்ணல் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு முழு வடிவம் கொடுக்கக் கூடியவர்தான் நம்முடைய ஒப்பற்ற தலைவராக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி என்பதை இன்றைக்கு நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அவருடைய ஆட்சிக் காலங்களில் ஓராண்டுக் காலத்திலே போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு புதுமைகளை உருவாக்கி காட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லும் பேருந்துகளுக்கு எப்பொழுதும் பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது. பேருந்துகள் அதிகரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : விரைந்து பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17; திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

17—

கூகையூர் அருகில் பாலம்.

*752. திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1991 செப்டம்பர் 11]

சின்னசேலம் தொகுதியில் கூகையூர் அருகில் வெள்ளாற்றில் தென்னாற்காடு மாவட்டத்தையும் திருச்சி மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இயற்கை பொறியாளர்களால் வரையப்பட்ட பூகோளத்தில் தென்னார்காடு மாவட்டத்தின் எல்லைக் கோடாக கிழக்கே வங்கக் கடலும் வடக்கே பெண்ணையாற்றங்கரையும், தெற்கே வெள்ளாறும், மேற்கே மூன்று மடங்கு கல்ராயன் மலையும் அமைந்து எங்களுடைய மாவட்டத்தில் எனது சின்னசேலம் தொகுதி மாவட்டத்தின் மேற்கே, சேலம் மாவட்டத்தின் எல்லையாக அமைந்திருக்கிறது. இந்த மாவட்டத்தினுடைய மேற்கு பகுதியாக இருக்கிற நாங்கள் எங்களுடைய தெற்குப் பகுதியினுடைய எல்லைக்கோடாக இந்த வெள்ளாறு அமைந்திருக்கிறது இந்த வெள்ளாற்றின் அந்தப் பகுதியில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள், முழு விளக்கம் வேண்டாம்.

திரு. ஆர். பி. பரமசிவம் : தலைவர் அவர்களே, இந்தகரையில் திருச்சி மாவட்டத்தினுடைய மக்களும் தென்னார்க்காடு மாவட்டத்தினுடைய மக்களும் வாழ்கின்றார்கள். அந்த ஆற்றின் குறுக்கே அந்தப் பாலம் கட்டுவதனால் விவசாயிகளுடைய விளைபொருள், அதாவது திருச்சி மாவட்டத்தில் வாழ்கின்ற. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் திருச்சி மாவட்டத்திற்கு, தென்னார்க்காடு மாவட்டத்திற்கு என்றெல்லாம் சொல்கிறீர்கள் கேள்வியை கேளுங்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம் : அங்கு இணைப்பு ஏற்படுவதனால் விளை பொருள்களை என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சின்னசேலம் நகரத்திற்கு அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் கொண்டு வந்து விற்பதற்கு வழி இருக்க வேண்டும். ஆகவே, அந்தப் பாலம் கட்டுவதனால் தென்னார்க்காடு மாவட்டத்தையும் திருச்சி மாவட்டத்தையும் இணைக்கின்ற இந்தப் பாலம் இரண்டு மாவட்ட மக்களுக்கும் பெரிதும்

உதவியாக இருக்கும். ஆகவே இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உடனடியாக அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த வெள்ளாற்றின் பாலம் 100 மீட்டர் ஆகும். இது இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்றது என்பதை நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் செலவாகும் என்பதையும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டுத் திட்டத்திலோ அல்லது வெல்ஃபேர் ப்ராஜக்ட் போன்ற திட்டங்களிலோ அந்தச் சாலை, அந்தப் பால வேலை சேர்க்கப்படவில்லை. ஆகவே, அதுதான் இல்லை என்ற பதிலைச் சொல்வதற்கு இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அந்த இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற பாலமாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரின் வேண்டுகோளை ஏற்று நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே அந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவதனால் குறைந்தது 80 கிலோ மீட்டர் தூரத்தை, திருச்சி மாவட்டத்தை அடைகின்ற அந்தத் தூரத்தை நாங்கள் நெருங்கிக்கொள்ள முடிகிறது. இந்த 80 கிலோ மீட்டர் தூரத்தினால் திருச்சி மாவட்டத்திற்கு அங்கே பெரிய சந்தையாக இருக்கின்ற நாட்டுச் சர்க்கரை மார்க்கெட் அமைந்திருக்கிறது. என்னுடைய மாவட்டத்தைச் சார்ந்தவர்களும் என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர்களும் அந்த மாவட்ட...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் டிஸ்கஷனுக்குப் போகிறீர்கள். கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் முதலிலே அந்த விளக்கமெல்லாம் சொல்லித்தானே கேள்வி கேட்டீர்கள்.

திரு. ஆர். பி. பரமசிவம் : ஆகவே, அந்தப் பாலத்தை அடுத்த ஆண்டாவது எடுத்துக்கொள்ள முடியுமா? அப்படி அதை ஹை லெவல் பிரிட்ஜாகக் கட்ட முடியவில்லையென்றால், காஸ்வே (Causeway) அமைத்துத் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

i991 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த மட்டிலே நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் தனியாகத் திட்டங்களுக்கு என்று 150 கோடி ரூபாய் களை ஒதுக்குவதாக—ஸ்பெஷல் சேங்ஷன் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த நிதி ஒதுக்கீடுகளைத் தவிர, சாலைப் பகுதிகள் தமிழ்நாட்டிலே மிகவும் மோசமாக இருக்கின்றது என்பதை நேரிலே தன்னுடைய சுற்றுப் பயணத்தின்போது கண்டறிந்த நம்முடைய ஒப்பற்ற முதல்வரவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு இந்த ஆண்டு அதிகமாக நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று அடுத்த ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் இரண்டு மாவட்டங்களையும் இணைக்கின்ற வகையில் அந்த பாலம் எடுத்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. பி. ஈஸ்வரமூர்த்தி. இந்தக் கேள்வியோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு, மறைந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்பட்ட அமராவதி ஆற்றின் குறுக்கே 87 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பாலம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்களே, இந்தக் கேள்வி சின்னசேலம் பகுதியிலே இருக்கக்கூடிய ஒரு ஆற்றைப் பற்றியது. உறுப்பினர் சொல்லும் அமராவதி ஆறு என்பது. . . . . . .

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : பாலம் கட்டுவது பற்றிதான் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலம் கட்டுவதைப் பற்றித்தான்; அந்தப் பாலம் கட்டுவதும் இந்த ஆற்றிலே அல்லது இந்தப் பகுதியிலே என்று இருந்தால ஏதாவது பதில் சொல்லலாம். உட்காருங்கள்.

அடுத்து, வினா எண். 18, திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.